


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 12.10.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்













We Shine Academy TM

# தமிழக நிகழ்வுகள்

- ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமான, **ஐ.எஸ்.ஓ தரச் சான்றிதழ்** பெற்ற கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு மறைந்த **முதலமைச்சர் எம்.ஜி.ஆர்** பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# இந்திய நிகழ்வுகள்

- **விபத்து மேலாண்மை, சுகாதாரம், கல்வி, தகவல் தொடர்பு, வானிலை முன்னறிவிப்பு,** மற்றும் நில பயன்பாட்டு திட்டமிடல் போன்ற பல்வேறு துறைகளில் விண்வெளி பயன்பாடுகளுக்காக புதிய விண்வெளி அறிவியல் மையத்தை **(Space Science Center) இஸ்ரோவானது ஜம்மு & காஷ்மீர்** மாநிலத்தில் உள்ள ஜம்மு மத்திய பல்கலைக் கழகத்தால் அமைக்க உள்ளது.
  - இம்மையத்திற்கு **சதீஸ் தவான்** விண்வெளி அறிவியல் மையம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

- மாநிலத்தின் தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் **கர்ப்பினிப் பெண்களுக்கு** ஊதிய இழப்பீட்டுத் திட்டத்தை வழங்கும் **(tea wage)** முதல் **மாநிலமாக அசாம்** திகழ்கிறது.
  - கர்ப்பிணி பெண்களுக்கு சிறந்த ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து பொருட்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்தின் கீழ், **ரூ.12000 ஆனது 4 தவணைகளில் வழங்கப்படும்.**

- **மத்திய நிதி** அமைச்சகமானது மாறிவரும் வியாபாரச் சூழலுக்கு ஏற்ப போட்டிச் சட்டத்தை **(Competition Law)** மாற்றியமைப்பதை உறுதி செய்வதற்காக **'இஞ்செட்டி சீனிவாஸ்'** தலைமையில் 9 உறுப்பினர்கள் கொண்ட போட்டிச் சட்ட சீராய்வுக் குழுவை **(competition Law Review Committee)**-யை உருவாக்கி

உள்ளது.

- குறிப்பு:
    - **போட்டிச் சட்டம் 2002ம் ஆண்டு** ஏற்படுத்தப்பட்டது.
    - இச்சட்டத்தின் கீழ் இந்திய போட்டி ஆணையம் **(competition Commission of India) 2003ம்** ஆண்டு ஏற்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

- **IND – INDO CORPAT → இந்தியா மற்றும் இந்தோனேசியா** நாடுகளின் கடற்படைகளுக்கிடையேயான 32வது ஒருங்கிணைந்த ரோந்து **(Coordinated Patrol)** இந்தோனேசியாவின் பெலவான் நகரில் அக்டோபர் 11 முதல் அக்டோபர் 27 வரை நடைபெறுகிறது.
    - இதன் கீழ் இரு நாடுகளின் கப்பல்களும், விமானங்களும் (Air Craft) சுமார் 236 கடல் மைல்கள் தூரத்திற்கு ரோந்து பணி மேற்கொள்ள உள்ளன.
    - **IND – INDO CORPAT – 2002 ஆம்** ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **இந்தோனேஷியாவின் ஜகர்த்தா நகரில்** நடைபெற்று வரும் பாரா **ஆசிய விளையாட்டு போட்டியில்,** ஆடவருக்கான உயரம் தாண்டுதலில் இந்தியாவின் **சரத் குமார் 1.90** மீட்டர் உயரம் தாண்டி முதலிடம் பிடித்துள்ளார். இந்திய வீரர்களான **வருண்பார்த்தி மற்றும் மாரியப்பன் தங்கவேலு** முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர்.
    - ஆடவருக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் **ஆனந்தன் குணசேகரன் வெள்ளிப்** பதக்கத்தையும், வினய் குமார்

வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஐரோப்பா, கனடா, பிரேசில் இத்தாலி** உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையம், பூமியிலிருந்து சுமார் **418 கி.மீ.** தூரத்தில் அமைந்துள்ளது.
  - இவ்விண்வெளி மையத்தின் கட்டுமான பணிக்கு, இரண்டு விண்வெளி வீரர்களை சுமந்து சென்ற ரஷ்யாவின் **“சோயுஸ்”** என்ற விண்கலம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக மத்திய கஜகஸ்தானில் ஷெஷ்காஸ் கானின் நகரத்திற்கு அருகே தரையிறக்கம் செய்யப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- உலக **பெண் குழந்தைகள் தினம் - அக்டோபர் 11**
  - பெண் குழந்தைகளுக்கான உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துவதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 11 அன்று சர்வதேச பெண் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
  - அக்டோபர் 11 ஆம் தேதியை பெண் குழந்தைகள் தினமாக ஐ.நா. சபையானது 2011-ல் அறிவித்தது.
  - 2018ம் ஆண்டு சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தின் கருத்துரு **(Theme) – ‘with Her : A Skilled Girl Force’**.



We Shine Academy

# விருதுகள்

- **ஜம்மு – காஷ்மீரில்** பயங்கரவாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டையின் போது, உடலில் குண்டு காயங்கள் பட்டு வீர மரணம் அடைந்த போலீஸ் கான்ஸ்டபிள் மன்சூர் அகமதுக்கு **"சவுர்ய சக்ரா"** விருது வழங்கப்பட்டுள்ளது.

We Shine Academy™